ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2300/27 - 2022 ඔක්තෝබර් මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.10.06
*2300/27 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்

**சுங்க அறிவித்தல்**

*அரசிறை பாதுகாப்புக் கட்டளை இல. 05/2022*

***1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறை பாதுகாப்புச் சட்டம்***

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறை பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக அவரால் ஆக்கப்பட்ட பின்வரும் கட்டளையானது பொதுமக்கள் அறியவென இத்தால் வெளியிடப்படுகிறது.*

**கே. எம். மஹிந்த ஸ்ரீவர்தன,**
செயலாளர்,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு
மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01.
2022, ஒற்றோபர் 06.

1A - PG 5994 — 481 (2022/10)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறை பாதுகாப்புச் சட்டம்**

கட்டளை

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறை பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர், ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், 2021, மாச்சு 24 ஆந் திகதிய 2220/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின், சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235) அட்டவணை 'அ' இன் கீழுள்ள பின்னிணைப்பு II இல், 2022, ஒற்றோபர் 07 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு ஒரு புதிய உருப்படி இல. 42 இனை இடைநுழைக்குமாறு இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

42. மாத விடாய்க்கால சுகாதார துணிகள் உற்பத்தி செய்யும் சுதேச உற்பத்தியாளர்களினால் கைத்தொழில் துறை அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில், மற்றும் சுங்கப்பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் இறக்குமதி செய்யப்படும், இ. மு. குறியீடுகள் 3920.10.20 (*பொலிஎதைலின் படலங்கள் - உலோகமாக்கப்படாத, 110 மி. மி. இனை விட அதிகமாக ஆனால் 230 மி. மி. இற்கு மேற்படாத*), 3920.10.90 (*பிற - பொலிஎதைலின் படலங்கள் (டபிள்யூ*) மற்றும் 3926.90.99 (*பிற - பொலிபுரோப்பைலின் படலங்கள்*) கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மூலப்பொருட்கள் அல்லது இடைநிலைப்பொருட்கள்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு
மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01.
2022, ஒற்றோபர் 06.

EOG 10-0037